

ஓலை 102| ஓசை 225| சனவரி 2025

# அகர முதல இலக்கியப் பேரவை




## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு

## பொருள்

தம் துன்பத்தைப் போக்கியவரின் நட்பை
ஏழேழு பிறப்பிலும் நல்லவர் எண்ணுவர்

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி



**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## அறுசீர் மண்டிலம்

## குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை!




கருத்த போதும் வானமது
    கார்மு கிலின்தன் குற்றத்தைப்
பெரும ளவிலே பார்ப்பதில்லை;
    பேரொ ளியினைப் பெற்றதாலே
அருகி உள்ளம் விண்மீனை
    அருமொ ளியான செங்கதிரும்
வருந்தும் வகையில் பார்ப்பதில்லை;
    மாந்தர் மட்டும் பார்க்கலாமா?

காற்றில் பலவும் இருந்தபோதும்
    கடிந்து குற்றம் பார்த்தேதான்
தூற்றிப் பேசித் திரிவதில்லை;
    துயரில் துடிக்கும் ஏழையர்க்கு
மாற்று வழியும் காணாமல்
    மனத்தை விற்றுக் குற்றமதை
ஏற்றி நெஞ்சில் வைத்தபடி
    ஏனோ பார்த்து இகழ்கின்றார்?

பசியில் துடித்தே துவளுகிற
    பாடு பட்டு ழைக்கின்றோர்
பசியைப் போக்க விழையாமல்
    பார்த்தே குற்றம் சுமத்துகின்றார்;
புசிக்கும் உணவில் குறைச்சொல்லிப்
    புசித்தே பின்னால் இகழ்கின்றார்;
நசிந்தே உறவும் போகாமல்
    நயமாய் உரைத்தால் சுற்றந்தாம்!




### இலக்கணக் குறிப்பு:

மண்டிலப் பாக்களில் அறுசீர் மண்டிலமும் ஒரு பா வகையாகும். இதில் பல வாய்பாட்டில் அமையும். அதிலொன்று தான் மேலேயுள்ள அறுசீர் மண்டிலமாகும். நான்கடிப் பாடலாகும். நான்கடியும் ஓரெதுகை பெற்று வரும். அடி தோறும் முதல் சீரிலும் நான்காம் சீரிலும் மோனை அமையும். மா+ மா + காய் என்ற வாய்பாட்டில் அரையடி தோறும் அமையும். அரையடி என்பது ஒரு வரியாகும். 2,4,6,8- ஆகிய வரிகளை முன்னால் உள்ள அடியின் தொடர்ச்சி என்பதை உணர்த்த மடக்கி உள்ளேதள்ளி எழுதுதல் வேண்டும்.

**நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்**

# இயற்கை

பாவகை : ஆசிரியப்பா

வானில் விண்மீன்
வண்ணப் பூக்கள்

கானிலே அமைதி
கல்லதர் வழிகள்

மானின் கண்கள்
மீனின் துள்ளல்.

புல்லில் வீழ்ந்திடும்
பனியுமே அழகு

புட்கள் பாடும்
பண்ணுமே இசையாம்.

ஆதவன் ஒளியில்
ஆனந்தம் கிட்டும்

ஆவினம் அழைத்தல்
ஆட்டின் துள்ளல்

சாரல் நீரும்
சாய்ந்தே வீழ்ச்சி

அந்தி வானின்
ஆடை மாற்றம்

ஆழ்கடல் அமைதி
ஆடும் நாற்றே

நண்டின் ஓட்டம்
நாணல் ஆட்டம்.

முத்தின் தூய்மை
மல்லியின் மலர்ச்சி

மேகச் சுற்றுலா
மறையும் மின்னல்

நானிலம் முழுதும்
நாடும் இன்பம்

யாண்டுமே இயற்கை
யாத்தது

மானிடர் அழித்தே
மான்மியம் குலைப்பரே.



கவிஞர் செ. கலைவாணி

# சென்ரியு கவிதைகள்


(1) புல்லின் பொறுமையை
சோதித்துப் பார்க்கும்
சித்திரம் வரையும் புழு!

(2) அம்மாவின் மூக்குத்தி
அழகாய் ஒளிரும்
தேயிலைக் கொழுந்து பறிக்கையில்!

(3) அப்பாவின் உபதேசம்
ஆச்சரியம் தரும்
முதுமை கனிகையில்!

(4) பூரண நிலவு
விளக்கை ஏற்றும்
ஏழைக் குடிசையில்!

(5) படித்த புத்தகம்
பூமியை வாசிக்கும்
மேசையிலிருந்து விழுகையில்!



கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், கிழக்கு மாகாணம்

# நிலாச்சோறு

வானம்
கக்கும் இருளை
நிலவு சாப்பிடுகிறது

பசியால்
குடிசையில்
குழந்தை அழுகிறது

நிலவைக் காட்டி
சோறூட்ட.
சோறில்லை
உணவுத் தட்டில்.

உணவுத் தட்டில்
நிலவு தெரிகிறது
குழந்தையின்
பசிக்குரல்
ஒடுங்குகிறது.

இந்த
இரவில் மட்டும் !



கவிஞர் சோ. ஸ்ரீதரன்

**1.**

மீண்டும் மீண்டும்
கேட்கத் தூண்டும் பாடலை
உனக்காகத்தான்
பாடுகிறேன்.
உன் நினைவிழைகளை
பட்டை தீட்டு
மனதுக்குள் சில்லென்று
மழை பொழியத் தொடங்கும்.
ஒற்றைக் குடைக்குள்
இருவருமாய்
பின்னிப்பிணைந்து
பயணித்த அந்நாளில் தான்
அந்தப் பொல்லாத காதல்
பொசுக்கெனப் பிறந்தது
நமக்குள்.

**2.**

என்னையும்
என் காதலையும்
நிராகரித்து விட்டாய்.
என் இதயத்தில்
பச்சை குத்திய
உன் பெயரை
என்ன செய்யட்டும்
நான்.



# இகல்

## அதிகாரம் : 86

எவ்வுயிரும் மற்றுயிரோடு
பொருந்தாத தீப்பண்பை.
இயலுயிரோடு வளர்க்கும்நோயே
இகலென்பர் பெரியோர்.

தற்பொருந்தாது வேறுபட்ட
செயல்புரிவோர்க்கு தானும்.
மாறுபாடுடைய துன்பம்
செய்யாதிருத்தல் உயர்வு.

மாறுபாடெனும் துன்பநோயதை
மனதிலிருந்து நீக்கிடில்.
அஃதவர்க்கு எக்காலமும்
அழிவிலா புகழ்தரும்.

துன்பத்தில் கொடுந்துன்பமாம்
மாறுபாடெனும் துன்பம்.
கெட்டொழிய ஒருவனுக்கு
நல்லின்பமே வந்துசேரும்.

உள்ளத்துள் தோன்றும்
மாறுபாடதனை ஏற்காது
அதனெதிராய் ஒழுகவல்லோனை
வெல்லுமாற்றலுள்ளோர் எவருமிலர்.

மாறுபாட்டால் வெல்லுதல்
இனிதென்போனின் உயிர்வாழ்க்கை.
தவறுதலும் அழிதலும்
சிறுபொழுதில் நிகழ்ந்துவிடும்.

மாறுபாடு ஆதரிக்கும்
தீயறிவுடையோர் வெற்றிக்கான.
நீதிநூல்களின் பொருளறிந்து
ஒருபோதும் உணரார்.




நெஞ்சத்தெழும் மாறுபாட்டை
எழவிடாதறுப்பதே ஆக்கந்தரும்.
அஃதெதிர்த்து வெல்லக்கருதிடின்
அவர்க்கு கேடுவந்துசேரும்.

நற்காலம் வருவதற்கான
வாய்ப்பில் இகல்மறுப்போன்.
கேட்டின்காலத்தில் அதனெதிர்த்து
வெல்லக் கருதுவான்.

மாறுபாடென்றால் துன்பமும்
அதற்குமாறான நட்பாடலால்.
நல்நீதியாம் பெருமிதமும்
நல்லோர்க்கு உண்டாகும்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# சீவக சிந்தாமணி

**(ஆசிரியர் திருத்தக்க தேவர்)**



சச்சந்தன் தோழன் புதல்வர்கள் இருவர்
கச்சிதமாக சேர்ந்தனர் சீவகன் நண்பர்களாக
உச்சி வகிடெடுத்து கூடி விளையாடினர்
பச்சைப்பிள்ளைகள் இருவர் நபுலன் விபுலன்

பாடசாலை செல்லும் வயதில் சீவகன்
கூடவே வந்தார்கள் நண்பர் இருவர்
தேடினாலும் கிடைக்காத அற்புத ஆசிரியர்
நாடி வந்தார் சீவகனுக்கு குருவாக

ஆசிரியன் மாணவன் முதலியோர் அமர்ந்து
பொன்னூசியால் நாமகள் எழுதி கற்றான்
அசரீரி ஆசிபெற்றவன் அல்லவா சீவகன்
பசி தூக்கமின்றி முதன்மை சீடனானான்

கலைமகள் ஆசியுடன் கல்வி பயின்றான்
மலைமகள் கீர்த்தியுடன் போர் வீரனானான்
அலைமகள் அருளோடு சீமானாக வளர்ந்தான்
திருமகள் நெற்றியில் திலகம் போன்றான்

வாரணம் ஆயிரம் வெல்லும் துணிவு
பூரணத்துவம் கிடைத்தது போர்பயிற்சியில்
சாரணர் அவன் வீரத்தை வாழ்த்தினர்
தோரணம் கட்டி கொண்டாடினர் மக்கள்
(சாரணர் : சமண சித்தர்)

மகனை நினைத்து பெருமிதம் கொண்டனர்
அவனின் அறிவும் வீரமும் அறிந்தனர்
தவத்தின் பயன் இப்படியொரு பிள்ளை
புவனம் காக்க வந்த புதல்வன்

திறமை கண்டு வியந்தார் ஆசிரியர்
அறத்தை நிலைநாட்ட வந்தவன் அல்லவா
சிறப்பாகஅவனை உளமாற பாராட்டினர்
உற்றதை அவனிடம் கூற நினைத்தார்

இந்நகரத்து அரசன் சச்சந்தன்
தன்னை சூழ்ந்திருக்கும் சூழ்ச்சி உணர்ந்தான்
உன் தாயை மயிற்பொறியில் அனுப்பினான்
பின் கட்டியங்காரனால் கொலையுண்டான்

ஊர்தீயில் தப்பியவள் மயானம் அடைந்தாள்
யாருக்கும் தெரியாமல் உன்னை ஈன்றாள்
ஊர் வணிகன் எடுத்து வளர்த்தான்
பார் போற்ற வளர்ந்து நிற்கிறாய்

உன்னைப் பெற்ற தாய் விசயை
அன்னை தவப்பள்ளியில் பத்திரமாக இருக்கிறாள்
தன் கதை கேட்ட சீவகன் வெகுண்டான்
உன் கோபம் நியாயமானது இது தருணம் அல்ல.

**தொடரும் ...**

**கவிஞர் ந. திருக்காழு**

படையுடன் வருகின்றாய்
ஓய்வின்றி உழைக்கின்றாய்
எடை குறைவாக இருந்தாலும்,
எதிர்த்துப் போராடும் திறன் கொண்டவரே!
சண்டையோ சச்சரவோ
தனித்து இருப்பதில்லை!

மயிலிறகால் அடித்தாலே மாண்டுவிடும் இனம்
இருப்பினும், மதயானையையே மாய்த்துவிடும்
வல்லமை கொண்டவரே
உழைப்பிற்கு நீரே எடுத்துக்காட்டு



கவிஞர் ஜோதிமணி, தாராபுரம்

# கனிதலை எதிர்பார்த்து

எனது நேசம்
காற்றில் கலந்த
வாசனை போலானது

எனது நேசம்
நதியில் கரைந்த
ஈரம் போலானது

பெருமரம் தாங்கும்
நிலம் போலவே
எனது நேசம்

அலை கடலின்
ஆழமாய்
எனது நேசம்

பெருவனத்தில்
வசந்தகால
அரும்புதலானது
எனது நேசம்

தீக்குள்ளிருக்கும்
மஞ்சளின் தேடலாய்
எனது நேசம்

ஆகாயம்
பூசிக் கொள்ளும்
நீலமாய் என் நேசம்

மழையின் துளிகளில்
ஒளிந்திருக்கும் பிரளயமாய்
எனது நேசம்

நேசத்தில்
நீயும் நானும்
ஒன்றே அல்ல

ஆயினும் என்ன?

பிரசவமே ஆகாத
கர்ப்பமாய்
அது வளர்ந்துகொண்டே
இருக்கும்
காலத்தின் கனிதலை
எதிர்பார்த்து!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# இறையோன்

அல்லல் இழைத்த இன்னார்
செருக்கு அறுக்க வந்தான் தென்னவன்.
காடையர் கொட்டம் அடக்கி
களமர் நிரை காத்த காவலன்.

ஒறுக்கும் ஒன்னாரை ஒடுக்க
மக்கள் படை திரட்டி
பகை வென்ற பழையன்.

இனம் நிமிர உயிரீந் தவன்.
இறந்தும் நினைவில் இருப்பவன்
இன்னல் நீக்கிய இறையோன்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# பெண்ணின் குமுறல்

கலைமகளாக விரும்பும் நாம் தான் - குடும்ப
வலையில் சிக்கி சிலையென உறைகிறோம்
மலைமலையாய் உயரும் சிலர் பொய்
விமர்சனப்போக்கால் ஒருநாள் மறைந்தே போகிறோம்

வீட்டை கட்டியாள்பவள் மீது மட்டுமே
உங்கள் சர்ச்சையும் சர்வாதிகாரமும்
என்றும் கட்டியவர்க்கு மட்டும் ஏன்
காலந்தோறும் முழு சுதந்திரம்

கனவுகாணும் வயதிற்குள் கால்கட்டு - பின்
காலாண்டு முடிவதற்குள் வலைப்பூட்டு
விதியை எண்ணி நான் பாட தாலாட்டு
விடியுமா? முடியுமா? இந்த வேதனை விளையாட்டு

விருந்தினர் வேறு; விரும்பியவர் வேறு
மனம் விரும்பிய மணவாளன்தான் - ஆனால்
மறந்தேதான்போனார் சமையலறையிலும் கூட
சரிபாதி பங்குண்டு என்று

உயர்ந்தோரே உற்று நோக்கியதுண்டா?
எந்த இனமாக இருந்தாலும்
பெண்களே தாழ்த்தப்பட்டவர்கள்
ஆனால், தீண்டத்தகாதவர்கள் இல்லை
இதுவே,உண்மை

பிற்போக்கு சமூகமே
எங்கள் இளமையும் கற்பனையும் மையலுக்கும்
உங்கள் வீட்டு சமையலுக்கும் மட்டுமா?



கவிஞர் சி. நந்தினி

இரவு முழுவதும்,
தியானத்தில் இருக்கிறது
பள்ளிக்கூடம்



கவிஞர் அ. செல்வராஜ், உடுமலைப்பேட்டை

# நான் புத்தகம் பேசுகிறேன்

நான்
புத்தகம் பேசுகிறேன்..!

படி வளர்வாய்
படி படி
படிப்படியாய்
உயர்வாய்

என்ன இல்லை
என்னில்?
ஏன் கவலை
உன்னில்?

என்ன வேண்டும்
என்பதைக்கேள்
மனமுவந்து
தருகிறேன்

ஆறுதல் வேண்டுமா
அன்னையாகவே
அமைகிறேன்

தேடல் வேண்டுமா
தகப்பனாகவே
விரைகிறேன்

மகிழ்ச்சி வேண்டுமா
குழந்தையாகவே
மாறுகிறேன்

வலிமை வேண்டுமா
உடன்பிறப்பாகவே
இருக்கிறேன்

காதலி வேண்டுமா
கவிதையாகவே
வருகிறேன்

நட்பு வேண்டுமா
கதையாகவே
தருகிறேன்

உறவுகள் வேண்டுமா
புதினமாகவே
போதிக்கிறேன்

சுகம் வேண்டுமா
மனையாளாய் வந்து
மணக்கிறேன்

அறிவு வேண்டுமா
விரிந்து விளைகிறேன்
புதுமைகள் வேண்டுமா
தினமும் பூத்துக் கொள்கிறேன்

தேசம் வேண்டுமா
மொழியின் வழியில்
இணைகிறேன்

நீ எதுவாக
ஆக விரும்புகிறாயோ
அதுவாகவே நான் தருகிறேன்

இன்பத் தமிழ் இணைத்தே
இன்னுமின்னும் தருகிறேன்

ஏனெனில்
நாளைய தலைமுறைக்கு
நீ சேர்த்து வைக்கும்
சேதாரம் இல்லாத
சொத்து நான்.

கவிஞர் முனைவர் மு. காமராஜ், பொள்ளாச்சி

# எதையும் தாங்கும் இதயம்



தாலாட்டும் நெஞ்சை
வாள் கொண்டு கீறுகிறாய்
பஞ்சில் துவைத்த நஞ்சு போல
நெஞ்சை கீறி செல்கிறாய் !

காட்டு முட்கள் வருடி கொடுத்ததில்
வறண்டு கிடக்கும் குருதி போல்
உறைந்து கிடைக்கிறது நெஞ்சம்
கோபத்தில் கொட்டியதெல்லாம்
தூபம் போட்டு பார்க்கிறது நெஞ்சம் !

நீறு பூத்தநெருப்பாக
தகித்துக் கொண்டே இருந்திருக்கிறாய்
தன் கிளையை ஒடித்து வைத்து
கொம்பு சீவிக் கொண்டிருக்கிறாய்

படபடவென பொரிந்து தள்ளியதில்
பொறுத்துக் கொள்ள முடியாமல்
வெடித்துச சிதறியது நான் தான்!

பாசத்தை எல்லாம் கருக்கி விட்டாய்
வார்த்தை மின்னலை சுழற்றி அடித்து
வாய்க்கும் போதெல்லாம் வீசி விட்டாய்!

பரவாயில்லை
எத்தனையோ பேரை ஏற்றிவிட்ட ஏணியை
எல்லோரையும் போல் நீயும் புறக்கணிக்கிறாய்

தன் கண்ணீர் மட்டுமே உலகம் இல்லை! - அது
கிணற்று தவளைக்கு புரிவதும் இல்லை!
கொல்லும் வாளை விட கூராக இருக்கிறது!
உந்தன் சொற்கள்!

நீ எறிந்த சொற்களால்
எரிந்து போய் கிடைக்கிறது உள்ளம்!
காட்சிப் பிழைகளில் காணாமல் போனது
ரத்த சொந்தம்!

பிழைத்து போக வழி தெரியாமல்
மலைத்து போய் நிற்கிறது வரட்டு கவுரவம்
சூடு பட்டாலும் தேநீரை விட்டு விடாத
நாவினை போல
மனம் அரவணைக்கவே செய்கிறது

முதுகில் குத்திவிட்டு புறம் பேசும்
உறவுகளுக்கு மத்தியில் - நீ
நெஞ்சில் தானே குத்தினாய்!

பாசத்தையும் பாதத்தையும் தாங்கிய மனம் இது
இதயம் தளர்ந்து கொண்டாலும்
இதையும் தாங்கிக் கொள்ளும் !

கவிஞர் சி முத்துராசன், அரியலூர்

பார்க்கையில் இயற்கை தரும் இதம்;
படைக்கையில்,செயல் தரும் கர்வம்;
கேட்கையில்,புள்களின் கானம் தரும் ஆனந்தம்;
தொடுகையில், புதுமதலை தரும் சுகம்;
முகர்கையில்,அப்போதே அலர்ந்த மலர் தரும் மணம்;
அறிகையில்,அறிவு தரும் ஞானம்;
அவை அனைத்தும், அனுபவிக்க நாம்;
எடுத்த பிறவி இனிது.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# கனவு



கனவுகளின் தேசம்
கனவு காண்கின்றேன்
கனவு மட்டுமே காண்கின்றேன்
நனவாகும் சாத்தியம்
கவிதை வரிகளில் மட்டுமே

கனவு காணவும்
கொஞ்சம் யோசியுங்கள்
கனவுக்கும் நாளை
வரி விதிக்கப்படலாம்

கனவுகள் காண்பதை
நிறுத்தி வையுங்கள்
கனவு காணும்
உரிமைகள் பறிக்கப்படலாம்

கனவை கவிதையாக்கவும்
கொஞ்சம் யோசியுங்கள்
கவிதைக்கும் நாளை
வரி விதிக்கப்படலாம்

கவிதை எழுதுவதையும்
நிறுத்தி வையுங்கள்
கவிதை எழுதவும்
தடை வரலாம்

வரிகளோடு பயணம்
வரிக்குதிரை அல்ல நான்
வரிகளோடு பயணத்தால்
வலிகளோடு தொடர்கிறேன்

ஆனாலும்
இங்கு சொல்லப்படுவது
இது கனவுகளின் தேசம்
கனவு காணுங்கள்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# கடலோடிகள்



மனைவி மக்களை பிரிந்து
நாள் கிழமை விசேஷ தினங்களில்
குடும்பத்தாரோடு இல்லாமல்
பிழைப்பு தேடி ஓடும் கடலோடிகள்!
பசி தாகம் தூக்கம் மறந்து
படும்பாட்டை பகிர முடியாமல்
நெஞ்சக்கூட்டில் பொத்தி வைத்து
கடலின் ஆழம் வரை சென்று
வலைவீசி மீன் பிடிக்க!
கடல் அன்னை ஏமாற்றாமல்
கைநிறைய அள்ளிக்கொடுத்து
அரவணைத்துக் கொள்ள!
நல்லபடியாக கரை திரும்பினால்
காதலோடு கொஞ்சி மகிழ!
கள்ளச் சிரிப்பை உதட்டோரம் தேக்கி வைத்து
மழலையோடு காத்திருக்கும் மனைவியவள்
மனம் மகிழ கரை சேரவேண்டும்!
வேண்டுதலோடு தினம் தினம்
கடலில் பயணம் போகும் கடலோடிகள்!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# தோல்வி

தோல்வி ஒருவனையும்
துரத்தாமல் விடுவதில்லை
ஓடியோ ஒழிந்தோ ஒதுங்கியோ
எப்படியாவது தப்பித்துவிடு
கற்பிக்கிறது சமூகம்
தப்பிக்க முடியாதவன்
உயிர் வாழ்க்கை அனுபவத்தின்
உச்சம் தொடுகிறான்
வேடிக்கை பார்க்கிறது சமூகம்
சமூகம் திணித்த
தீமைகளை எல்லாம்
இல்லாமல் ஆக்குகிறது
ஒரு தோல்வி
வெறும் மனிதனை மட்டுமில்லை
மாமனிதனையும் கூட
மனிதனாக்கிவிடுகிறது
ஒரு தோல்வி
உயிர்மூச்சு முடிவதற்கு முன்பே
மனிதனாவதை விட
உயிர் வாழ்க்கை அனுபவத்தின் உச்சம்
வேறு என்ன இருந்துவிட முடியும்



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

நீ நீயாய் இரு.
நிலவிலும் களங்கம் தேடும்
நெஞ்சங்கள் வாழும் உலகமிது.
வாழ்ந்தாலும் ஏசும்
தாழ்ந்தாலும் ஏசும்.
உன் ஒவ்வொரு அசைவுக்கும்
பழி சொல்லிச் செல்லும்
பாவம் வழி சொல்லத்தெரியாது.
நிஜங்களை தேடித்தேடி
நெஞ்சுரம் இழக்காதே
நீ நீயாய் இரு!



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# இதயம் திறப்பாய் இனியவளே



வஞ்சியுன் நெஞ்சினிலே
வாழ்ந்திடவே ஆசைதான்

தஞ்சமென வந்தேன்
மிஞ்சியே போவதென்ன

கெஞ்சிடும் பார்வையால்
விளம்புகிறேன் கண்ணே

உள்ளத்தில் உறவாகிட
சம்மதம் தந்துவிடு

காத்திருந்த காலமது
கனியட்டும் உன்னாலே

இதழோரப் புன்னகையால்
இதயமும் இதமாகுதே

இளமையின் ரீங்காரம்
வசந்தகீதமாய் ஒலிக்கட்டும்

தடாகத்துத் தாமரையே
தவிக்க வைப்பதேனோ

நித்தம் நினைவுகளில்
உந்தன் எண்ணமே

மான்விழியாளே இதயம்
திறப்பாய் இனியவளே

தோகைதனை விரித்திடு
வாழ்வில் கலந்திடு

உயிரில் ஒன்றிணைந்து
இல்லறமதை நல்லறமாக்கு

இன்பமது கூடிடவே
இணைந்தே பயணிப்போம்


மனதில் விலகிடாது
பாசத்தின் பிணைப்பு

ஈர்த்திடும் அகத்தில்
புன்னகை பூக்கட்டும்

நெடுநாள் கனவது
பலித்திட்டால் மகிழ்ந்திடுவேனே

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

எட்டயபுரத்தில் உதித்த கவிதைச் சூரியனே
எட்டாயுயரத்தில் தமிழை உயர்த்தினாய் பாரினிலே
அன்னைத் தமிழில் அமுத மொழிகள்
என்னை ஈர்த்த வைர வரிகள்
பெண்ணுக்கும் ஞானத்தை வைத்தான் ஈசன்
மண்ணில் ஏற்க மறுப்பவன் நீசன்
ஓடி விளையாட பாப்பாவை அழைத்தாய்
கூடிவிளையாட வைத்து ஒற்றுமைக்காய் உழைத்தாய்
விடுதலைக் கனலை எங்கும் பற்றவைத்தாய்
அடுதல்புரியும் பெண்களுக்கு விடுதலை வேண்டினாய்
தேனீக்கள் கூட்டில் வைத்த இனிமையை
பாட்டில் கொடுத்த பாவலன் நீயே
பெண் விடுதலையும் மண் விடுதலையும்
உமதிரு கண்கள் இசைதரும் பண்கள்
அஞ்சாத சிங்கமாய் வலம் வந்தாய்
பாஞ்சாலி சபதத்தால் பலம் தந்தாய்
கண்ணன் பாட்டு குயில் பாட்டு
மண்ணுலக மாந்தர் செவிக்கு அதிர்வேட்டு
மோனைக் காலில் தமிழை நிறுத்தினாய்
யானை காலால்மிதித்தாலும் வெறுத்திடா வாழ்வுற்றாய்



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# யாரைத்தான் நம்புவது

யாரைத்தான்
நம்புவதோ

யானையாய்
நம்பிக்கையோ

உதவி
செய்பவனாய்

நடிக்கும்
கபடதாரிகள்

உள்ளங்கையில்
தாங்குவதாய்

உள்குத்தில்
ஊசலாடுபவர்

நல்லவரை
இனங்கண்டால்

நட்பும்
அடிக்கரும்பே



கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# தேயிலை காடுகள்

மலை அரசியின் மேனியெங்கும்
தேயிலை தோட்டங்களின் பாதயாத்திரை

பசுமையின் ரகசியம் பேசும்
தேயிலை செடிகள் மலை
மாவட்டத்தின் முகவரிகளாய்

தேயிலை தோட்ட தொழிலாளர்களின்
வாழ்க்கையோ சுடுநீரில்
கொதிநிலையாய்

ஒரு கோப்பை தேநீரில் இவர்களின்
கண்ணீர் துளிகள் காயங்களாய்

வறுமையின் நிறமும் தேநீரின்
நிறமும் இவர்கள் வாழ்க்கை
பாடத்தில் ஒற்றுமையாய்

தேயிலை பறித்த தழும்புகள்
இவர்கள் கரங்களில் ஏழ்மையின்
ஏக்கங்களாய்

பச்சை தேயிலை பறிக்கும்
இவர்களின் நாட்கள் தினந்தோறும்
கிழிக்கப்படுகிறது வறுமையின் முட்களால்



கவிஞர் ஸ்ரீ. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

எறும்புகள் மொய்க்கின்றன
எவரும் கவலைப்படவில்லை
பக்கத்து வீட்டுவாசலில்
பச்சரிசி மாக்கோலம்
**

அதி காரத்தால்
அல்சரை வாங்கலாம்
அதிகாரத்தால்
அன்பை வாங்கமுடியுமா?

**

வலி மருந்து!

தலை கைகால் வலிக்குத்
தலை சிறந்த மருந்து
விலையோ மிகமலிவு என
வலிய என்னிடம்
விற்க முயன்றவனிடம்
மெலிதாய்க் கேட்டேன்
மனசு வலிக்கிறது.
மருந்தை எங்கே தடவ?



கவிஞர் செ. இரவி, ஈரோடு

# அவள் ஒரு அழகி

காலை காலமாய்
ஒரு கவிதையானதே
நிலவின் தோற்றமே

வாழும் நாட்களில்
ஒரு வசந்தம் வீசுதே
இணைந்த இயற்கையில்

எழுதாத எண்ணங்கள்
வந்தாடுதே
எண்ணிக்கை இல்லாத
சங்கமத்தில்

இணைந்தோடுதே
மனம் இறகானதே

ஒரு இனிய ரசனை
இதயம் தொட்டுச் செல்லும்
என்ன இந்த இன்பம்
மீட்டிச் செல்லும் விந்தை

பூக்கள் சினுங்குதே
பனித்துளியின் தீண்டலில்
மௌனம் பாஷையே

பாக்கள் பாடுதே
வண்ணப் பட்டு பூச்சிகள்
காதல் கொள்ளுதே

செங்கதிர் வந்திங்கு முத்தாடுதே
சிவந்து திரிந்திங்கு நின்றாடுதே




அழகானதே இளங்காலையே

ஒரு இனிய ரசனை
இதயம் தொட்டுச் செல்லும்
என்ன இந்த இன்பம்
மீட்டிச்செல்லும் விந்தை

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# ஏழையின் தர்மம்



தர்மம் செய்ய
என்னிடம் வசதியில்லை
என்று ஏங்குகிறேன்

பாதணியின்றி
பாதையில் நடக்கையில்
சிறு கல்லைக் கண்டாலும்
அப்புறப்படுத்துகிறேன்.

என் வீட்டு வாசலால்
ஓட்டைக் கூரை ஒழுகி ஓடுகிறது
நான் பட்ட முன்றில் மரத்தில்
புள்ளினம் வந்து பசியாறுகின்றன

சாப்பிடும் தட்டிலிருந்து
பூனைக்கும் காகத்திற்கும்
சிறு கவளங்கள் வைக்கிறேன்


கையில் கிடைத்த
மிச்சக் காசில் யாசகருக்கும்
பெருமனதோடு கொடுக்கிறேன்.

பார்வையிழந்த முதியவரின்
கைகளைப் பிடித்து
வீதியைக் கடக்கச் செய்கிறேன்

தருமம் தலை காக்கும்
என்கிறார் அந்தப்பெரியவர்

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ்

# புலமைப் பகலவன்



புலமைப் பகலவன்
புதுமை பாரதி

தமிழில் பிறந்த
புரட்சித் தீப்பொறி

இலக்கணச் சிறையை
தகர்த்த ராகம்

இலக்கியத் தவத்தில்
பிறந்த வரம்

விழிகளின் வழியில்
பொங்கிய அறச்சீற்றம்

பகுத்தறிவு பாடல்களின்
பாட்டுடைத் தலைவன்

இன்றும் நிறைவேறா
பாஞ்சாலியின் சபதம்

மொழிகளில் முத்தெடுத்த
தத்துவக் கவிஞன்

சாதி(தீ)யில் சுகந்தேடும்
மாந்தரால் வெகுண்டவனே

ஐம்பூதங்களின் ஓலத்தால்
ஆழ்மனதில் கலங்கியவனே

முண்டாசு புலவனே
மறு பிறப்பெடுப்பாயா?

மதியில்லா மனிதன்
மனிதத்துடன் வாழ்வதற்கு

கவிஞர் அனல் நிலவன், கொசவபட்டி, திண்டுக்கல்

# நன்முகம் காண்பேனே

உயர்வற உயர்நல உயர்வினை உடையவனே
உயர்வுகளை அளவிடாத பெருமை உடையவனே
உலக ஆத்மாக்கள் எல்லாம் நிறைந்தவனே
நித்திரையிலும் ஜீவராசிகள் அனைத்தையும் காத்தவனே
அரிதுயிலின் அரியாய் நின்ற பெருமையுடையவனே
பல அவதாரங்கள் எடுத்த எம்பெருமானே
மண்ணுலக மக்களுக்கு நல்வழிக் காட்டியவனே
பக்தர்களுக்கு எல்லாம் நல்வாழ்வு கொடுத்தவனே
சங்க இலக்கிய பாடல்களில் வந்தவனே
நோய்களுக்கு எல்லாம் மருந்தாக திகழ்ந்தவனே
கொடிய பாவங்களை எல்லாம் நீக்கியவனே
அறியாமை இருளை நீக்கிய பேரின்பமானவனே
செடிகளுக்கு எல்லாம் பூவாய் திகழ்ந்தவனே
நெஞ்சத்தில் குடிக்கொண்டு வலம் வந்தவனே
மேனியெங்கும் தங்கநகைக் கொண்டு மின்னுபவனே
வானுலகம் வந்து நன்முகம் காண்பேனே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம், நாகர்கோவில்

# தர்மமே அறம் கூறும் ஆயுதம்




தர்மமே அறம்
கூறும் ஆயுதம்
தக்க தருணத்தில்
தலைகாக்கும் மாமருந்து

உறவுகளின் உண்மையுள்ள
உணர்வுகளின் பாலம்
அனாதையாகாத அன்பின்
அழகிய அடையாளம்

இறையன்பை அதிகரித்து
அவனருளைப் பெருக்கும்
மனிதாபிமானம் வாழ்தலுக்கான
மண்ணின் முகவரி

மனித வாழ்வியலின்
மங்காத இருத்தல்களை
இலங்கச் செய்யும்
மாசற்ற கலங்கரை

உற்றார் உறவுகள்
உதறி வீசினாலும்
உதவிக் கரம்
நீட்டவைக்கும் அற்புதம்

நிலையற்ற வாழ்வில்
சொற்பம் வாழ்ந்திட
நிம்மதி நிலைத்திடவே
கைகளால் கொடுத்திடுவோம்

குறுகிய உள்ளம்
துடைத்தெறிந்து தூய்மையாய்
புத்துலகு படைத்திடுவோம்

நாம் மண்ணிலே
மரித்துப் போனாலும்
செய்நன்றி செழித்து
பூமியை அழகாக்கும்

கவிஞர் சேஹ் மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# கருணை மகனே

கன்னி மரியாளின் கருவில்
கடவுளே இறைதூதன் வடிவில்

பெத்தலஹேம் பெற்ற பெருமானே
பெருவுலகில் புனிதமான தேவனே

கசையடியில் குருதியாய் கசிந்தாய்
கண்களில் கணிவை வழிந்தாய்

சிலுவையிலே சிறை கண்டாய்
சிந்தையிலே அன்பை கொண்டாய்

மரிக்கும் தருணமும் மலர்ந்தாய்
மன்னிப்பை மனதில் தந்தாய்

கன்னித்தாயின் கருணை மகனே
கர்த்தர் தந்த தேவதூதனே

எங்கள் சிந்தையில் நின்றவரே
என்றும் எந்தை ஆனவரே

மரணத்தை வென்று உயிர்த்தவரே
மகானே எங்கள் இயேசுநாதரே.



கவிஞர் ஆனந்த் குவை. ஜெயராமன், சேத்தியாத்தோப்பு

# சுனாமி நினைவலைகள்

சுனாமி, காலனின் பினாமி!



அகலக் கால்வைத்த
ஆழிப்பேரலையால் - தமிழ்க்கரையின்
நீளம் பார்த்தது - மரணங்களின்
நீலம் பூத்தது - மறக்க முடியா
ஓலம் கேட்டது.

2004 டிசம்பர் இருத்தியாறு.
பல்லாயிரக்கணக்கான உயிர்கள்
புல்லாகிப்போகுமெனக் கண்டது யாரு?

கடலடியில் பாறைத் தட்டுகள் இடறியதாம் - அதற்கு
இந்தோனேஷியாவில் கோபித்துக் கொண்டவள்
இங்கு வந்து சீறிவிட்டுச் சென்றாய் - விதிகளைத்
திருத்தி, சீவிவிட்டுச் சென்றாய் - காலனை
எங்கள் மீது ஏவிவிட்டுக் கொன்றாய்.

தட்டங்கே கெட்டதனால்,
தட்டுக்கெட்டுப் போச்சுதிங்கே.
தாயிருந்தா தந்தையில்லை.
தகப்பனைக் கண்டால், தாயைக் காணோம்.
தம்பதி வந்துவிட்டால், பிள்ளைகள் இல்லை.
பிள்ளைகள் தேடியும் பல பெற்றோரைக் காணோம்.

படகில்லை, பணமில்லை - வேய்ந்திருந்த
குடிசை ஒன்றில்லை - குடும்பத்தில்
இழப்பின்றி எதுவுமில்லை.
நிவாரணம் மட்டும் நம்பி
நிர்க்கதியாய் நின்றதென்ன மாயம்?

பள்ளிக்கு இடைநிறுத்தாமல்
வரச்சொன்ன வாத்தியார் வாழ்க்கைகூட
இடைநிறுத்தம் ஆகிடுச்சு.
கத்தி எடுத்தவன் கத்தியிலே சாவான்
என்ற உண்மை,
கடலுக்கும் பொருந்திப் போயிடுச்சு.
கடலும் கத்தி சுத்தி கொன்னுடுச்சு.

இதோ இப்போதான் நடந்ததுபோல்
இருந்தாலும் - இருபது ஆண்டுகள்
நொடிப்போல ஓடிடுச்சு - நீ
கலைத்துப்போட்ட தாக்கம் மாறவில்லை.
கனத்துப் போயிருக்கும் ஏக்கம் தீரவில்லை.

இழப்புகள் எல்லாமே
சொன்ன பாடம் ஒன்னுதான்.
இயற்கையை மீறினால்
சொல்லும் பாடம் நின்னுதான்.

சாமரம் வீசவும் தெரியும் அலையாய்
பூமரங் வீசவும் தெரியும், பனையை.
பாரபட்சமின்றி,
தூக்கி எறிந்தாய் தூரபட்சம்.

பருவத்தை மாற்றினால் - பூமித்தாய் தன்
உருவத்தை மாற்றுவாள்.
வெள்ளமோ, புயலோ,
நிலநடுக்கமோ, ஆழிப்பேரலையோ
எந்த வகையிலும் சினம் காட்டுவாள்.
பொங்கி எழுந்து குணம் காட்டுவாள்.

இயற்'கை" வை(த்)தால் என்னவாது?
இயைந்து வாழ்வோம், இனியாவது!

கவிஞர் அ. நைனார் முஹம்மது அன்சாரி, திருச்சி

# நானும் என்னை மறந்து பேசினேன்

நீ உனது நண்பர்களுடன்
உன்னை மறந்து பேசுகையில்
அதை எதிரில் இருந்து ரசித்த நானும்
என்னை மறந்து பேசினேன்
நீ என் அருகிலும் இருப்பதாய் நினைத்து.



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

கர்ஜிக்கும் சிங்கம்
வழியில் பயமின்றி நிற்கிறது
சிங்கக்குட்டி

மரக்கிளைகளின் நடுவே
கிழிந்து தொங்குகிறது
வானம்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# மரம் வளர்க்கும் மனித நேயம்



மேகம் திறலுது மழை வர பாக்குது
குளிர் காத்து அடிக்குது
தேகமெல்லாம் சிலு சிலுக்குது.

புயல் காற்று மழையென
வானிலை அறிவிப்பு மிரட்டுது
சாலை வழியெல்லாம் மக்கள் நடமாட்டமின்றி
வெறிச் சோடிக்கிடக்குது.

மக்க மனுசாலுங்க ஆடுமாடா
வீட்டுக்குள்ளே முடங்கியே கிடக்குதுங்க.
ஆறுகள் எல்லாம் ரெண்டு கரைதொட்டு
வெள்ளம் கரைபுரண்டு கடலா ஆர்பரிக்குது.

ஆயிரம் ஆனாலும் கோடை காலம் போல்
ஒருநாளும் வராது அக்கினி வெயிலு மண்டைய பொலந்தாலும்
அருவியா வேர்வை வழிஞ்சி ஓடினாலும்.

வெக்கையா உடம்ப வறுத்து எடுத்தாலும்
அத்தனை வேலைகளும் கச்சிதமா நடந்திடும்
மழை மட்டும் கொஞ்சம் கடுமையான பொழிஞ்சிட்டா
அத்தனை வேலைகளும் அப்படியே நின்னிடும்.

சாலையே வெறிச்சோடி மைதானமா மாறிடும்
ஆனாலும் மழைபொழிவு ஆனந்தம் தந்திடும்.
அதற்கு ஈடு இல்லவே இல்லை பூமிக்கே உயிர் கொடுக்கும்
மழையே அமுதம்தான்!

உணவு உற்பத்திக்கும் உலக உயிர்களுக்கு தண்ணீரே ஆதாராம்
அதனாலே மழையும் கூட கடவுளின் அவதாரமே!
கருணையாய் எந்நாளும் இயற்கையை போற்றிடும்
"இறை குணம்" வேண்டும்!

"மரம் வளர்த்து" போற்றிடும் மனித நேயம் வேண்டும்
வரும் தலை முறையும் வளமாய் வாழ வழி காணவேண்டும்.

கவிஞர் ஜேபி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# விடைப்பெற்று செல்கிறேன்

பல காதல் கதைகளைச் சேர்த்து வைத்தேன்
பல காதல் முறிவுகளுக்கும்
நானே சாட்சி ஆனேன்
கூர்மையாக நான் இருக்கும் நேரத்தில்
எழுத்துலகையே ஒரு நொடியில்
ஆட்டிப் படைப்பேன்

காகிதத்திற்கு ஆறுதல் சொல்லும் நண்பனானேன்
பலரின் புத்தகப்பையில் சுற்றுலா சென்றேன்
கைத்தொலைப்பேசிகள் இல்லா அ
ந்த பொன்னானக் காலம்
பலரின் எழுத்துத்திறனை வெளிக் கொணர
உறுதுணையாய் இருந்தேன்

தேய்பிறையைச் சந்திக்கும் நிலாவைப் போல
இறுதியில் என் வாழ்வும் தேய்ந்தே முடியும்
நிலவிற்கோ விடிவு காலம் உண்டு
நானோ பலர் வளர்வதற்கு என் உடலை வருத்தி
எழுத்துலகிற்கே அர்ப்பணித்து
உலகிலிருந்து விடைப்பெற்றுச் செல்கிறேன்



கவிஞர் ரோஹிணி ராஜாமணி, மலேசியா

பாரதம் எங்கும் முழங்கும் தீ
புதுமை பேசிய புரட்சித் தீ
வாக்கினில் மிளிரும் வளமைத் தீ
தேசம் மீதில் நேசம் கொண்டு
தேசப் பற்றென பற்றிய தீ
அச்சம் நீக்கி உச்சம் தொட
ஊக்கம் கொடுக்கும் உணர்ச்சித் தீ
செந்தமிழ் நாட்டையும் செந்தமிழ் மொழியையும்
சேமமுற செய்த செழுமைத் தீ
தமிழன் என்றே தனித்தன்மை கொண்டோர்
உள்ளத்தில் எல்லாம் தீராத் தீ
அது புலமைப் பகலவன் பாரதீ



கவிஞர் கீர்த்தனா. பு, திருப்பூர் மாவட்டம்

# சிக்கன் 65

சிக்கன் 65 -- ல்
சிக்கிக் கொள்கிறது
சிந்தை

அகிலத்தில்
அகவை 65 ம்
தாண்டி
வாழ்ந்திடும்
ஆசையில்
அதை
தவிர்ப்பதில்
இருக்கிறது
பெரிய விந்தை



கவிஞர் அ. சேவியர், கடலூர்

## பா வகை: பாவகை: வெள்ளொத் தாழிசை

ஓவியங்கள் எல்லாம் உமையாளின் கற்பனை
காவியங்கள் வாசித்தாள் கண்ணுக்குள் நின்றிடுவாள்
பாவிமனம் ஏங்குதடி பார்த்து.

கவிதையெல்லாம் தோற்றுவிடும் கன்னியவள் முன்னால்
புவியெல்லாம் பாடிடும் புன்னகை வீசி
செவியெல்லாம் உன்பேச்சு சேர்ந்து.

நினைவாக வாழ்கின்றாய் நித்தமும் நெஞ்சில்
எனையாலும் பெண்மையே என்வாழ்வின் தூணே
உனைசேர ஏங்குதடி ஊழ்ந்து.



கவிஞர் ஈ. தீவணிதன், பல்லடம்

சின்ன வயதில் பாட்டி கையை பிடித்து
பள்ளிச் செல்லுகையில் சிந்திய கண்ணீர்!
அவரின் அன்பான பேச்சு
என் மனதில் ஏற்பட்ட வலிகள் மாறவில்லை,
மாறாக கையை கடித்து விட்டு ஓடி ஒழிந்த பசுமையான நினைவு

நான் போகும் பாதை வழியே
என்னை பின் தொடரும் நிழலை இரசித்த நாட்கள்

தொடர் மழையில் நனைவதும் காகித கப்பல் விடுவதும்,
பாட்டியிடம் அடி வாங்குவதும் மறக்க முடியாத நினைவு!

பழத்தோட்டத்தில் நுழைந்து பழுத்த பழத்தை பறித்துருசித்து
தோழியர்களை மாட்டி விட்ட அருமையான நினைவு!

தேன் கூட்டை கல்லால் அடித்து விட்டு தப்பி ஓடி விழுந்த நினைவு!

பாட்டி என்னை அழைத்து மரண தருவாயில் கூறிய வார்த்தைகள்
என் மனதில் அகலா விளக்காய் ஒளிரும் நிஜமான நினைவுகள்!



கவிஞர் முர்ஷிதா பேகம், அக்குறணை

# குடியால் குடி கெடும்

குவளையில் கலந்து
குடிலை மறந்து
குப்புற விழுந்து
குடியிலே நிறைந்து

குழந்தைகளை வருந்த வைத்து
குற்றங்களால் முடிந்து
குடம் போல உருண்டு
குழியிலே துவைந்து

குசலத்தை துறந்து
குடும்பத்திற்கு துயரதை தந்து
குந்தியிருப்பவர்களிடம் வம்பிழுத்து
குகையாக வாழ்வில் நுழைந்து

குதியாட்டத்தில் சிறந்து
குதர்க்கங்கள் செய்து
குதூகலம் என நினைந்து
குபீரென்ற துர் நீர் எடுத்து

குரல்வளை நீர் காய்ந்து
குவியும் நல் எண்ணத்தை புதைத்து
குழுக்கள் அமைத்து
குடியிலே மதிப்பை தொலைத்து



குட்டிச்சுவராகும் மனிதர்களே
குடியால் குடி மட்டுமல்ல
குடலும் வெந்து நொந்து
குறைகாலத்தில் வெந்து தணிந்து

குடுத்ததோ சிவனோ
குடிகார நண்பனோ
குலத்தை நினைத்து
குற்றமில்லா நல்வழியில் செல்வாயாக!


குறிப்பாக நல் மகிழ்வெல்லாம் காணாமலே
குண்டுகட்டாக எமனும் இழுத்துச் செல்வானே
குதூகலமான வாழ்விலே
குடியால் எல்லாம் நாசமே

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

## ஆண்டாள் 033

### நாச்சியார் 12வது திருமொழி "மற்றிருந்தீர்கட்கு" 6முதல் 10 வரை005

ஆறாவது பாசுரத்தே மழைக்கால குளிர்மேகம்
கருவிளம்பூ காயாம்பூ தாமரையும் கோதைமுன்
தோன்றிட்டே ருஷீகேசன்  பக்கம் போ என்றுரைக்கும்!
ஆநிரைகள் மேய்த்தயர்ந்து மேல்வியர்த்து மிகுபசியால்
ரிஷிபத்னிகள் ப்ரசாதத்தை வழங்குநேரம் வழங்கிடமாம்
"பக்தவிலோ சனத்"தானம் தனைச்சேர்க்க வேண்டுகிறாள்!
கண்டுமகிழ் வெய்திடவே ஆர்வத்தள் அன்னவளே!
ஏழாவது பாசுரத்தே கோதைதனை பார்த்தவர்கள்
மேனிநிற மாறுபாடு மனத்தளர்ச்சி அவமானம்
வெள்ளிதழ்கள் ஊண்வெறுப்பு அறிவின்மை தணித்திடவே
மாலவனின் துழாய்மாலை சூட்டிடவே வேணுமென்பாள்!
பலராமன் அசுரன்தனை கொன்றழித்த "பாண்டீரம் "
சேர்த்திடவே வேண்டுவளே! எட்டாவது பாசுரத்தே
வீடுவிட்டு காடிருந்த இடைச்சாதி தோன்றினோன்!
களவாலே கட்டுண்டோன்! குணமெல்லாம் குற்றமானோன்!
என்வசவு அவனுக்கே! பசுபிழைக்க கல்மழைபோய்
வென்றகுடை கோவர்த்தனம் சேர்த்திடவே வேண்டுவளே!
ஒன்பதாவது பாசுரத்தே கோதைவளர் கூட்டுக்கிளி
உணவளித்தால் கோவிந்தன் பேரழைக்கும்! ஊண்நிறுத்தி
தண்டித்தால் உலகளந்தான் வந்துதவ வேண்டிடுமே!
நாமவொலி காதணைய மயங்கிவீழல் தனக்காகும்!
கிளிதங்கு மாடவுச்சி ஓங்கிட்ட துவாரகையில்
தனைச்சேர்க்க வேண்டுவளே! பத்தாவது பாசுரத்தே
நீள்கூந்தல் தானுடைய கோதையாள்! பெரியாழ்வார்
திருமகளே! கண்ணனவன் வாழிடங்கள் யாவினிலும்
சேர்த்திடவே  வேண்டுவளே! பாவையதும் திருமொழியும்
ஓதவல்லார் வாழிடங்கள் பரமபதமே ஆகிடுமே!
திருமாலைக்  கண்டிடுதல் பேர்கேட்டல் குணமுரைத்தல்
சேர்த்தியுறல் இச்சித்தல் அவள்வழியே நாரணன்தாள்
சரணுற்று  இரட்சிப்பால் மகிழ்ந்தோங்கி மன்னுவமே!




குறிப்பு: பன்னிரண்டாம் திருமொழி முற்றிற்று!பதின்மூன்று "கண்ணனென்னும்" திருமொழியில் பத்துண்டே! பதிநான்காம் திருமொழியாய் "பட்டிமேய்ந்து "தன்னிலுள்ள பத்தோடும் முற்றுப்பெறும்! தொண்டரடி பாணரென இருவருளர்! ஆழ்வார்கள் பன்னிருவர் பாவோதி மகிழ்வோமே!

கவிஞர் கணக்காயன் (இ சே இராமன்)

# நாட்குறிப்பை பார்க்கிறேன்

நாட்களும் உருண்டோட
வருடமொன்றும் வரண்டோட
வயதொன்று மேலேறி
வந்ததடி இன்று
வாழ்நாளில் ஓர் பகுதி
முடிந்ததடி நன்று.





நான் கழித்த நாட்களிலே
நாழிகையை ஒதுக்கி
நாற்காலி மீதிருந்து
நாட்காட்டி பார்த்து
நாட்குறிப்பை புரட்டுகிறேன்
நன்றியுடன் நானும்.
புதுவருடம் பிறந்ததடி
நேற்றுதானே காணும்.

நாட்களின் நகர்வினிலே நான்
மறந்த நண்பர் அதிகம்.
போக்கிட மின்னித் திரிகையில்
கிடைத்த புதுமுகங்களும் அதிகம்.
சந்தனமாய் இருந்து வாசம்
தந்தவரும் அதிகம்.
சாக்கடையாய் இருந்து சாபங்கள்
கொடுத்தவரும் அதிகம்.

வாழையடி வாழையாக
வந்த நண்பருண்டு.
வாழ்த்துரைத்து வஞ்சனைகள்
செய்தவரும் உண்டு.
நீர்பாய்ச்சி நான் வளர்த்த
தென்னைகளும் உண்டு.
நட்போடு நல்வழியிலே
ஆற்றுப்படுத்தியவருண்டு
அவர்தானே வருகிறார்
கடைசிவரை இன்று.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

மொத்த குளத்தையும்
அசைத்து பார்க்கிறது
எறிந்த சிறு கல்.



கவிஞர் ச. இராஜ்குமார்

# தென்னை



ஓங்கி உயர்ந்த நிற்கும்
ஓரறிவு உயிர்வகை
கொடுத்துச் சிறப்பதிலே
ஆறறிவை மிஞ்சும் வகை.

தலையில் நீரைச் சுமந்து நிற்கும்
தவிக்கும் வாய்க்குத்
தண்ணீர் தரும்.

எரிகின்ற வயிற்றுக்கு
இளநீராய் இதம்தரும்
தருகின்ற பயனாலே
தரணிக்கே வியப்பு வரும்.

தேங்காய் பாலாய்
தேகத்திற்கு நன்மைதரும்
பாங்காய் கொடுப்பதில்
பாரிக்கு இணை வரும்.

நாரினைக் கொடுத்தே
தேரினை இழுக்கும்
பேரைப் புகழை பெரிதாய் வெறுக்கும்.

ஓலையை கொடுத்தே
ஏழைக்கே உறைவிடம் தந்தே
இறையாகும்.

பந்தங்களை இணைக்கும்
விழாக்களிலே
பாளையாய் நின்றே
வரவேற்கும்.

மறையிலே கூறிய
மாண்பெல்லாம்
இந்த மரத்திற்கு உண்டு அறிவீரோ?

ஓங்கி உயர்ந்த தென்னையே
எடுத்துக்காட்டாய்
கூறுவேன் உன்னையே!

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# நினைத்தாலே இனிக்கும்!

சின்னஞ்சிறு மழலைகளின் சிரித்தமுகம் கவர்கிறதே!
வண்ணங்கள் வெவ்வேறாய்! எண்ணங்களால் ஒன்றாய்!
ஆண்பெண் பேதமின்றி அன்பால் ஒன்றினரே!
நினைவுகளைப் பகிர்ந்ததில் மட்டற்ற மகிழ்வலையோ?
மாலைவேளை மழையில் நனைந்தது! ஏழுவண்ண
மாலையாய் வானவில்லை இரசித்தது! தேவதைகள்
யானைகள், எலிகளாய் பலவடிவம் காட்டும்
வான் மேகங்களைக் கண்டு வியந்தது!
கண்சிமிட்டும் விண்மீன்களைக் எண்ண முயன்றது!
ஓடும் மழைநீரில் காகிதக் கப்பலை
ஓடவிட்டு, மூழ்கும் போதெல்லாம் அழுதது!
மயிலிறகு, இலைகள், கோலிக் குண்டுகளை
மறைத்து வைத்து பொக்கிஷமாய்க் காத்தது!
இதையெல்லாம் பகிர்ந்து இன்புறும் பருவமிது!
உள்ளத்தின் அழகை உரைக்கிறதே இன்முகமும்!
கள்ளமிலா உள்ளங்கள் பிள்ளைகளின் வரங்கள்!
உள்ளும்தோறும் மகிழ்விக்கும் நினைவுகள் நிலைக்கட்டும்!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

நடைப்பயிற்சி முடிந்து திரும்பிய அப்பா
வாழைக்கு நீர் ஊற்றி அதனுடன் பேசியபடி அம்மா
சூரியனுடன் கோவித்துக் கொண்டு போர்வைக்குள் தங்கை
நாளிதழை மடித்து மாமனார் கையில் கொடுக்கும் மனைவி
சட்டென்று காலை மிதித்து இறங்கியபடி துபாய் மால் பயணி
தூக்கம் தெளிந்து நெரிசலை விலக்கி
பிசினஸ் பேருந்து நிறுத்தத்தில் இறங்க தயார் ஆன நான்.



கவிஞர் ஜீவா

# தொடர்ந்திடும் நினைவுகள்

சேயைத் தாலாட்டும் தாயாய்
சில நினைவுகள்
இதமாக இதயத்தை
வருடிக் கொண்டாலும்

பல நொடிகளில்
தாயைத் தொலைத்த சேயாய்
சில நினைவுகள் வலிகளைத் தந்து
கதற வைக்கிறது

நித்தம் நியதியின்றி
நித்திரையைக் கெடுத்து
தலையணையோடு சமர் செய்து
தோற்று தொலைய

தொடர்ந்திடும் நினைவுகள்
தீராத தாகம் போல்
பரிவு பிரிவாகி பரிதாபமாக
அலை மோதுகிறது.

ஆழமான அன்புப் பரிசும் நினைவே...
ஆழ்மனதின் அழியாப் பரிசும் நினைவே...
நினைவுகளும் நீங்க மறுக்க
விரும்பியும் விரும்பாமலும்
சுமந்து கொண்டே கடக்க வேண்டியுள்ளது
வரமான சாபங்களாக..



கவிஞர் முபீதா அமீன், அக்கரைப்பற்று

# நித்திரை இல்லா இரவு

சாத்தியமின்றி போன
ஏதொரு நிகழ்வும்
அசாத்தியமில்லை என எண்ணிய ஏதொன்றும்
நெஞ்சறுக்கும் போது
கணமாகிய மனதும்

பரிபோன நிம்மதியில்
அவதிப்படுகையில்
தூக்கமற்று கிடக்கவே
நெடுந்தூர இரவும்
கண்சிமிட்டிக்கிடக்க

நெடுஇரவும் நீண்டுத்தெரியவே புரளும்
அலைப்புர நினைவின் ததும்பல்கள்
கண்ணசருதலை தரமறுத்தே விடும் போது
நித்திரையற்ற இரவையே பரிசாக்கி விடுகிறது.

பாசம் வைத்த உறவும்
நேசம் வைத்த உணர்வும் கை சேதாரமாகும் போதில்
எப்படித்தான் தூக்கம் கண்களில் வந்து சேரும்.

தூங்கா இரவில் தூதனுப்பி வழியல்லவா கேட்கும்
மறந்து போய் விடத்தான்.



கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம்

# மழை

வலியும் பறந்து போகும்
நீ பூமியை வந்தடையும் எழிழைக் கண்டாலே.

சொட்டு சொட்டு சாறலாய் நீயும் பூமியில் விழ
உன் தூரல்களை கைகளால் அடித்து
விளையாடுகிறார்கள் மழலைகள்.

அவர்கள் முகத்தில் உச்ச கட்ட மகிழ்வை நோக்கையில்
என் பால்ய கால நினைவுகள் தாம்
மணக்கண்களின் முன்னே அலைகளாய்.

ஓடியாடி உன்னில் விளையாடித் திரிந்த காலமது
இருமல் வருமென வீட்டினர் திட்டினாலும்
அதையெல்லாம் பொருட்படுத்தாது
உன்னில் விளையாட விரைந்திடுவேன்.

கொட்டும் மழையிலே கட்டிய கூடாரத்திற்குள்
நண்பர் கூட்டம் சேரந்து கூட்டாஞ்சோறு.
அதன் சுவையோ அமிர்தம் தான் எமகெல்லாம்.

உன் மழைத்துளிகளில் முழுமையாய் நனைந்திட்டாலும்
தீராது என்னாசை.
நீ தரும் மன அமைதி என்னை ஈர்த்து விடும்.

அற்புத மழையே!
உன்னில் நனைந்து ஆட்டம் போட்ட நாட்களை
நீ என்றும் எனக்கு ஞாபகம் காட்டுகிறாய்.



கவிஞர் ரீஸ்னா ரமீஸான், அக்குறணை

# நித்திரையில்லா இரவு

ஆசைகள் பலதை சுமந்த மனது இன்றோ
அவ்வாசைகளை எண்ணியபடியே
நாட்களை கடத்துகிறதே.

கிடைக்காமல் போன
அத்தனை ஆசையும்
கவலைகளாய் மாறிப் போய்
நெஞ்சத்தை கனமாக்கிட
தூக்கமோ இரவின் மடியில்
துயிலவும் மறுக்கிறதே.

விடை தெரியா பாதையில்
ஆசைகள் மட்டும் ஆர்ப்பரிக்க
நிறைவேறாமல் போன ஏக்கத்தினால்
நிலை தடுமாறிப் போகிறதே.

இரவின் நிழலில் இளைபாரிட
விரும்பும் இதயமோ
இன்னல்களுக்கு மத்தியில்
சிக்கித் தவிக்கிறதே.

நித்திரையில்லா இரவில் இவளும்
இவளது கலைந்து போன கனவுகளும்.



கவிஞர் சியானா றிஸ்மி, புத்தளம்

விலை மாற்றங்கள் தெருவில் நின்று கூவுகிறது
வீடு மாற்றங்கள் அவலமெனக் கதறுகிறது
துணை மாற்றங்கள் துன்பமின்றி நிகழ்கிறது
கண மாற்றங்கள் காலங்களை குலைக்கின்றது
மன மாற்றங்கள் மறு வாழ்வு நோக்கி நகர்கிறது
பண மாற்றங்கள் பாதாளம் வரை பாய்கின்றது

இதை கண்டும் காணாமாலும் ஓடும்
என் கால்கள் அலுத்து விட்டது
அடுத்தொரு பாதை  மாற்றத்திற்காக தயாராகிறது
இன்னுமென்ன?
மாற்றமொன்று தானே மாறாதது.



கவிஞர் பாத்திமா மிஸ்னா

அகவைகள் கடந்து போகவே
அன்னை மடி உறக்கமும்
அம்மம்மா வழி தாலாட்டுகளும்
நினைவலைகளில் மட்டுமே சுகம் தருகின்றன.

அடுத்த நாளைப்பற்றிய கவலையில்லாமல்
ஆழ்ந்த யோசனைகளும் சூழ்ந்து கொள்ளாமல்
தலையணையைத் தலை தொடவே
உறக்கம் வந்து தொற்றிக்கொண்ட இரவுகள் எங்கே?

எதிர்காலம் அறியாது தள்ளாடும் நாட்களும்
எங்கும் நிறைந்த தோல்விகளின் கண்ணீர் ரணங்கள்
பரீட்சை முனைகளில் தீராத பாடங்களும்
பாதியிலேயே களவாடி விடுகின்றன உறக்கத்தை.

சுற்றும் கடிகார முட்களுடன் பயணமாகின்றது
என் நித்திரையில்லா இரவுகள்
தொடரும் இரவுகளில் தூக்கமும் தேடுபொருளாயிற்று.



கவிஞர் அதீபா ஹஸன், காத்தான்குடி

சுனாமி என்ற ஒரு அரக்கன்தான்
2004 இல் 20 ஆண்டுகளுக்கு முன்தான்
கோரத்தாண்டவம் ஆடிவிட்டு பின் அடங்கியது.
மக்கள் மனதில் அழியாத ஆறாத வடுக்கலாக இருக்கிறது

சம்பவத்திற்கு பிறகு பலர் வீடு, உறவு இழந்து
நிற்கதியாய் நின்றனர்.
குறிப்பாக பெற்றோரை இழந்த குழந்தைகள் ஏராளம்.
பலர் வசதி உள்ளவர்கள் நிறைய உதவிகளை தாராளம்
இது போன்ற சம்பவங்கள் இனி தொடராத இருக்க
மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமே!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# அரைஞாண் கயிறு



வெள்ளை எருக்கையின்
வேர் பிடுங்கி
மஞ்சள் தோய்த்து
பாட்டன் திரித்த கயிறை
காத்து கருப்பு
அண்டாமலிருக்க
ஏழாநாத்து குழந்தைக்கு கட்டுவதாக
அம்மா சொன்னாள்

பாட்டியா வீட்டு பந்தம் தொடர
தாய்மாமன் சீதனமாக
குஞ்சுமணி சலங்கையும்
அரைமணி பிள்ளையும்
தொங்கிக் கொண்டிருந்த காலம்
கொஞ்ச நாள்

அப்பன் கிழித்த வேட்டிக்கந்தை
அம்மணம் மறைக்கக் கோமணமாக
சொருகுவதற்கு ஏதுவாக
கொஞ்ச நாள்

இடுப்பில் தங்காத கால் சட்டையை
அவிழ்ந்து விழாமல்
இறுக்கிப்பிடித்தபடி
கொஞ்ச நாளென
தேவைக்கு உதவியது போக

இப்போதெல்லாம்
குலத்துக்கொரு நிறம் பிரித்து
எல்லோரிடுப்பிலும் பூசிய மலமாக
பெரும் நாற்றம் வீசுகிறது
இந்த
அரைஞாண் கயிறு.

கவிஞர் வெறுத்தா

# காரணங்களாய்

ஒரே மாதிரியான
வெற்றிக்கு சந்தோஷமும்
தோல்விக்கான வருத்தமும்
கவலைகளுக்கான பதட்டமும்
எல்லா மனிதர்களுக்கும்
ஒரே மாதிரியானவை அல்ல.
விதவிதமான காரணங்களாய்

'முதல் நிகழ்வு'
'தொடர் நிகழ்வுகள்'
'மனப்பக்குவம்"
'பட்டறிவு'
'மனத்திடம்'
'அடுத்தது என்ன என்ற சிந்தனை'

****

வெறும் வார்த்தைகளா?

எப்படி இருக்கிறாய்
என்பதற்கு
'ஏதோ இருக்கிறேன்'

உனக்கு உதவமுடியவில்லை
என்பதற்கு
'பரவாயில்லை'

என்ன முடிவு
செய்துள்ளாய்?
என்பதற்கு
'குழப்பமாய் உள்ளது'

இந்த வேலை
செய்கிறாய் என்றாயே
என்பதற்கு
'மறந்து விட்டேன்'

உன் எதிர்பார்ப்பு
எந்த நிலையில்
என்பதற்கு
'பயமாய் இருக்கிறது'

இவை வெறும்
வார்த்தை மட்டுமா
அந்த நேரத்தின்
ஒட்டு மொத்த
உள்ளத்து உணர்வுகளின்
வெளிப்பாடு



கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

வானொலிக்கு முத்தம்
நீ இடுகிறாய்
என் பெயர் கேட்டதும்
*
சிதறிய கனவுகள்
மிரண்டது நான்
உன்னுடைய வதனம்

*
உன் நினைவுச் சிலுவையில்
என்னை அறைந்தேன்
சுகமோ சுகம்.
*
நீ வரும் ஓசை
துடிக்கும் இதயம்
உணர்கிறேன் உயிரை.
*
பசித்த மனம்
ஏக்கத் தாகம்
பார்வைச் சோறூட்டு
*
அன்பு ஊஞ்சலில்
முத்தத் தாலாட்டு
ஆசை மனதுக்கு.
*
சொர்க்கமா சுவாசமா
சொல்லாமல் கொல்லும்
உன் மௌனம்
*
கனவு தேசத்தில்
எந்த வரி போடுவாய்
உன்னை நினைத்திட.
*
உயிர் இருந்தும்
உனைப் பார்க்கையில்
சுவாசச் சமாதி
*
உள்ளே கூடுகட்டி
சோகம் வாழ்கிறது
உனைப் பார்க்காதபோது.



கவிஞர் இளையவன் சிவா

எதையும் தொலைக்காமல் இருங்கள்
தொலைந்து விட்டால் தேடாமல் இருங்கள்
நிம்மதி உங்கள் வசம்

***

மனைவியுடன் இருப்பதை விட
வண்டியுடன் இருப்பதில் பெருமிதம்
புகைப்படத்தில் ஆணுக்கு

****

வீட்டிலிருந்தபடியே
பயணிக்க
புத்தகம் படி

****

கம்யூனிஸம் கம்மியாக பேசி
கதைகள் பல யோசி
தயாரிப்பாளர் கூற்று

***

சொல் பேச்சு கேட்காத
பொம்மை
அவள்

***

ஆயிரம் நம்பிக்கைகளில்
ஆன்மீகம் ஒரு புள்ளி
அவ்வளவே

***

அழுக்கு ஜன்னல்கள்
ஆஸ்பத்திரி ஓவியம்

***

தவறொன்றும் இல்லை என்றாலும்
முறையென்ற ஒன்று முற்றிலும் மாறாதது
தந்தை சொல்லுக்கு தலை குனிந்தே தீர வேண்டும்



கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்



"பாப்பாவோட பேரு என்ன...?"
"ம்ம்ம்...நீயே கண்டுபுடி!"
"பார்பி...?"
"ம்ஹூம்..."
"சின்ட்ரெல்லா...?"
"ம்ஹூம்ம்..."
"டோரா புஜ்ஜி...?'
"ம்ம்ஹூம்..."
"ரோசி...?"
"அய்ய்ய...அது என்னோட நாய்க்குட்ட்ட்டி...!?"
'ம்ம்ம்...ரஹ்மத்த்...?"
"இல்ல்ல...அது பிரெண்டோட பேரு...!'
"ஐய்ய்...கண்டுபுடிச்ச்சுட்டேன்...குப்ப்பாயி...?"
"அய்யோ...! அப்பத்தா பேரு...கன்னத்துல பொட்டுக்கோ!"
"என்னடாது...ம்ம்...நானே பெரு வக்கவா! மரப்பாச்ச்ச்சி...?"
"ஊ...ஹூம்ம்...அது அப்பத்தாவொட பொம்ம்ம!"
"அச்ச்சச்சோ...தெரீலயே!?"
"அப்ப நானே சொல்லிடுவேன்...?!"
"... ... !!"
"சொல்லிடுவேன்...!"
"... ... !!"
"சொல்லிடுவேன்...!!'
"சொல்லப்போறேன்...!!!"
"மகாலச்சுமீஈஈ...!!!!" என்று குதிக்கையில்-
தாமரையாய் விரியும் மழலைப் புன்னகை!
அள்ளித் தூக்கிக் கொஞ்சுகையில்
மெல்லத் துவங்குகிறது
கோடை விடுமுறைப் பயணத்தில்
ஒரு-
வசந்த ரயில் சினேகம்.

கவிஞர் ரவிஜி

## நான்காம் அத்தியாயம்

## மும்பை பயணம்



மும்பை செல்லும் ரயிலில் ஏறி அமர்ந்ததும் அவனுக்கு தங்கை கவுசல்யா தான் மனத்திரையில் ஓடினாள். 'அண்ணா என்னை மகளிர் பிரிவு தலைவியாக்குவதாக கூறிவிட்டு சென்னைக்கு அழைத்துப்போன இணை அமைச்சர் வலம்புரி மாதவன் பலமுறை என்னிடம் வாலாட்டினார்.

நான் அவரை நேரடியாக எச்சரிக்கை செய்யவே, அவருடைய ஆட்களை விட்டு என்னை தூக்கிக் கொண்டு போய் அவருடைய பங்களாவிலே ஓடவிட்டு நிர்வாணமாக்கி என்னைக் கெடுத்தார்.

அவன் இனி உயிர் வாழக்கூடாது. நீ அவனை உயிரோடுக் கொழுத்தவேண்டும். நான் இறந்து போனாலும், என் ஆத்மா சாந்தியடைய வேண்டுமானால் நீ இந்தக் காரியத்தைக் கண்டிப்பாக முடிக்க வேண்டும்.' தூக்கில் தொங்கியவளின் கைகளில் கிடைத்த கடிதத்தை எடுத்தவன் உடனே மறைத்துக் கொண்டு போலீஸிற்கும், மற்றவர்களுக்கும் தெரியப்படுத்தி, போஸ்ட் மார்ட்டம் ஆகி அவளை எரித்து விட்டு வந்த போது மனதில் உறுதிப்பூண்டது ஞாபகம் வந்தது.

திரும்பவும் ஒரு முறை நினைவுப் படுத்திக் கொண்டான். 'அன்பு மாதவனே உன்னைக் கொலை செய்கிற வரைக்கும் எனக்கும் ஊன் உறக்கமில்லை. என் தங்கை ஆன்மா சாந்தியடையப் போவதுமில்லை.

எத்தனை அழகான புத்திசாலியான கவுசல்யா ஒரு மந்திரியின் சொல்கேட்டு சென்னைவரைசென்றவளே.. அவன் புத்தியைத் தெரிந்துகொண்டு தப்பித்து நீ ஊர் திரும்பியிருந்தால்..." இனி எதையும் நினைத்து பிரயோனஜனமில்லை.

என் ஆருயிர் தங்கையைக் கொன்றவனை இந்த உலகில் விட்டு வைக்கக்கூடாது. இதுதான் இனி என் வாழ்க்கையின் லட்சியமாக இருக்கவேண்டும்.'

மும்பையில் தாராவியில் தங்கியிருக்கும் நண்பனுக்கு போன் பண்ணிச் சொல்லியிருந்ததால் பழனியை தாதர் ஸ்டேசனில் வரவேற்க சிவா வந்திருந்தான்.

இருவரும் சிவாவின் இருப்பிடம் வந்து, பழனியின் தங்கை இறந்து போன துக்கத்தைப் பகிர்ந்து கொண்ட போது இருட்டிப் போயிருந்தது.

"காமராஜ் ஸ்கூல் எந்தப்பக்கம் இருக்கிறது சிவா?''
''என்ன விசயம்? ஸ்கூலே வேலைக்கு அப்ளிகேசன் எதுவும் போடப் போகிறாயா?'', "சொல்லேன்.''
''பக்கம் தான். என்னவிசயம்.?''
''வரும் போது நோட்டீஸ் ஒட்டியிருந்ததைப் பார்த்தேன். அமைச்சர் வலம்புரி மாதவன் ஏதோ முப்பெரும் விழாவில் கலந்து கொள்ளப்போகிறதாகவும் அந்த முப்பெரும் விழா காமராஜ் பள்ளி வளாகத்தில் நடக்கப் போவதாகவும் போட்டிருந்தார்கள்.''
''ஏன் உனக்கு வலம்புரி மாதவனை மிகவும் பிடிக்குமா?'', ''ரொம்பப் பிடிக்கும். அதற்காகத் தானே இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன்.''
''என்ன சொல்கிறாய் பழனி...?''
''ஏதோ ஞாபகத்திலே உளருகிறேன். ஆமா நீ என்ன வேலை செய்து கொண்டிருக்கிறாய்?''
''இங்கே ஒரு பிரிண்டிங் பிரஸ்லே கம்போசிஸ்டரா வேலை செய்து கொண்டிருக்கிறேன்.''
''ம்... வர்றியா. அமைச்சர் வருவதற்கு ஏற்பாடுகள் எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்று பார்த்து விட்டு வரலாம்.''
''என்ன உனக்கு இவ்வளவு அக்கறை. நான் உன்னை ஸ்டேசனுக்கு கூப்பிட வந்ததே பெரிய களைப்பாகப் போய்விட்டது. இவ்வளவு தூரம் பயணம் செய்த உனக்கு டயர்டாக இல்லை.''
''சரி உனக்கு களைப்பாக இருந்தால் படுத்துக் கொள். நான் இங்கேயாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொண்டு காமராஜ் ஸ்கூலுக்குப் பக்கத்திலே போய்விட்டு வருகிறேன்.''
''உன் விருப்பம்.'' என்று சொல்லிய சிவா எழுந்து படுக்கையறைக்குச் செல்ல,

"உன் விருப்பம்." என்று சொல்லிய சிவா எழுந்து படுக்கையறைக்குச் செல்ல, பாண்ட் போட்டுக் கொண்டு கிளம்பினான் பழனி.

அடுத்த நாள் நடக்க வேண்டிய கூட்டத்திற்கு மேடை அலங்காரங்கள் நடந்து கொண்டிருந்தன. தமிழ் மக்கள் வளர்ச்சி நற்பணி மன்றத்தினர் ஓடி ஆடி பணிகளை ஆற்றிக் கொண்டிருந்தனர்.

மன்றத்தின் அங்கத்தினர் ஒருவரை அணுகிய பழனி, "சார் உங்கபேரென்ன? உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே.?.. சிகரெட்எடுத்துக்கொள்ளுங்கள்." என்றான்.

"ரெம்ஜிஸ். ஆமா நீங்க யாரு. எனக்கு உங்களை அடையாளம் தெரியவில்லையே. நான் தான் நற்பணி மன்றத்தின் தலைவர்." என்றார் ரெம்ஜிஸ்.

"அப்படியா? அமைச்சர் மும்பைக்கு எப்போது வருகிறார்.?"

"இன்றைக்கு ராத்திரி பத்து மணிக்கு வருகிறார்."

"ஏன் இன்றைக்கே வருகிறார் ?.நாளைக்குத் தானே மீட்டிங்.?"

"யாருக்குத் தெரியும். எதாவது சொந்த வேலைகள் இருக்கும். அது சரி நீங்க பம்பாய்க்கு புதுசா?"

"ஆமா சார். நீங்கள் அமைச்சரை வரவேற்க ஏர்ப்போர்ட் போறீங்களா?"

"ஆமா இன்னும் கொஞ்ச நேரத்தில் கிளம்ப வேண்டியதுதான்." என்று பேசிக் கொண்டிருந்த போது தலைவரே நாளைக்கு அமைச்சருக்கு பரிசளிப்பதற்கு வீர சிவாஜி சிலை ஒன்று வாங்கி வந்திருக்கிறோம். கொஞ்சம் பார்த்து விடுகிறீர்களா?" என்று இன்னொரு அங்கத்தினர் வந்து சொல்ல "வர்றேன்சார்." என்று ரெம்ஜிஸ் கிளம்ப வேகமாக பனிரெண்டு வெள்ளை அம்பாசிடர் கார்கள் மாறி மாறி வந்து காமராஜர் பள்ளி வளாகத்திற்கு வந்து நின்றது.



தொடரும் ...

கவிஞர் இராஜகைநிலவன்

"கவிமணி" இரஜகை நிலவன்
மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்ற வெளியீடு

இரஜகை நிலவன் இந்த நூல் ஆசிரியர் பல கவிதைகள், சிறுகதைகள், நாவல் போன்றவற்றை சமூக சீர்திருத்த நோக்கத்தோடு எழுதியவர்.

நீ என்ன கள்ளா பாலா என்ற காதல் கவிதையின் தொகுப்பு அருமை. ஆனால் ஆசிரியர் தன் உரையில் காதல் கவிதையின் கழனி என்று குறிப்பிடுகிறார் .இதை வாசிக்கும் போது கழனி என்பது மனித வாழ்க்கையோடு ஒன்றி ஒன்றாக வாழ்வது ஆகும். இந்த கழனி இல்லையேல் நாமும் இல்லை அதுபோன்று தனிமனித வாழ்வில் காதல் இல்லையேல் மனித வாழ்க்கையில் வாழ்வியலே இல்லை என்பது ஆகும். சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான குருந்தொகையில் கூறி இருப்பது போல "செம்புலபெயர் நீ போல அன்புடை . நெஞ்சம்... தான் ..கலந்தனவே''. என்ற பாடலுக்கு ஏற்ப இவரின் காதல் கவிதை நாலுக்கு ஏற்றது ஆகும். ஐம்பெரும் காப்பியத்திலும் காதல் உண்டு காதல் வயப்படாத மனிதர்கள் இருக்கவே முடியாது இது இரு பாலருக்கும் பொருந்தும். பிராணிகளுக்கும், பறவைகளுக்கும் காதல் உண்டு.
காதலை எழுதாத எந்த கவிஞரும் இல்லை. ஏன் கம்பன் கூட எழுதியிருக்கிறார் .ராமர்சீதையை பார்க்கின்றார். அந்த காட்சியை மிக அழகாக எழுதியிருக்கிறார். அண்ணலும் நோக்கினான் .- அவளும் நோக்கினாள் இது சைவ காதல். அது போன்றுதான் நமது ஆசிரியர் தன்னுடைய நூலில் நீ கள்ளா பாலா என்ற கவிதை நூலில் சைவக்காதலையும் அசைவக்காதலையும் தத்ரூபமாக எழுதியிருக்கின்றாரர்.

"விரல்கள். மீட்டாத வீணை நீயடி"
இனம்கண்ட இன்பத்தின் அருவியாய்
இமயமும் நீயடி
இன்னல்கள் எல்லாம்
மின்னல் களா பிறந்திட செய்யும்
இயந்திரன் நீயடி
காதலியை எப்படி ஒப்பிடுகிறார் என்றால் நமது தேசத்திற்கு

அரணாக வட எல்லையில் உள்ள இமையத்துக்கு (மலைக்கு) ஒப்பிடுகிறார். இமயத்தில் எப்போதும் பனி படர்ந்திருக்கும் அது போல் இன்பத்தின் அருவியாய் என்றும் இன்னல்கள் (துன்பம்) ஒரு நொடியில் பறந்திட செய்யும் மின்னலின் வெளிச்சம் என்றும் கூறுகின்ற பாங்கு மிக அருமை.

"தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு
நேர கொண்ட பார்வையில்
நேசத்தை சிந்திடும்"

நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்தான் பெண்மைக்கு அழகு என்று முண்டாசு கவிஞன் பாரதி கூறினான். ஆனால் ஆசிரியரின் கூற்று நோகொண்ட பார்வையில் நேசத்தை அருவியாய்
கொட்டுபவள் அவளிடம் தென்றலே கொஞ்சம் தூது செல் என்று குறிப்பிடுகிறார்.

கிராமத்தில் நடக்கின்ற காதல் களியாட்டங்களையும், ஆற்றங்கரையிலும், ஓடைகளிலும்,வயல் வெளியில் நடக்கும் காதலையும் மிக சிறப்பாக கூறியுள்ளார் . முதுமையின் காதல் அன்பு என்பது எத்தனை காலங்கள் வாழ்ந்தாலும் தினம் தோறும் அன்று மலர்ந்த மலர்போல் இருப்பது ஆகும். ஏட்டினில் எழுதினேன் காற்றினில் வந்ததோ இதில் தென்றல், வெப்ப ஈரகாற்று அலைகள் இவற்றில் எல்லாம் தூது விடுகிறார். பெண்ணின் அழகு இந்த கவிதையில் படைத்த பிரம்மனே அதிசயிக்கும் வண்ணம் உள்ளவளே என்று குறிப்பிடுகிறார்.

ஈசனையும் கண்ணிமைக்காமல்
ஈர்ந்திழுக்கும் காந்தமே
ஏகலைவன் கையில் ஏந்திய அம்பாக
மீன் விழிகளின் வீச்சால்

"இறைவன் மனிதனாக பிறக்க வேண்டும்; அவன் காதலித்து வேதனையில் வாட வேண்டும்" என்ற பாடலின் வரிகள் போன்று ஈசனையும் ஈர்த்திடும் காந்தமே என்று மட்டும் சொல்லாது மகாபாரத்தில் வரும் ஏகலைவன் அன்பு எத்தனை

வீரமும் விரியமும் உள்ளதோ அந்த அம்புகுறி தவறாது அதுபோன்று தன் காதலியின் விழிகளின் பார்வைக்கு ஏகலைவன் அம்பை ஒப்பிட்டு கூறுகிறார்.

ஒவ்வொரு கவிதையும் அதன் தலைப்பும் மிகவும் சிறப்பாக உள்ளது. எல்லா கவிதைகளிலும் ஆசிரியர் எடுத்து எழுதுகின்ற ஒவ்வொரு சொற்களும் வரிகளின் நயமும் மிகச்சிறப்பு. இந்த கவிதை நூலின் ஆசிரியர் பன்முகம் கொண்டவர், இணையவழியில் கவிதை போட்டி நடத்தும் அத்துனை நிறுவனத்திடமும் முதல் பரிசு தட்டிச் செல்பவர்.

அரபிக்கடல் போன்று மற்றவர்களிடம் அன்பும், மனிதநேயமும் மிக்கவர். நூல் ஆசிரியரின் எழுத்துக்கள் இந்து மகா சமுத்திரம் போன்று ஆழமும் பசிபிக்கடல் போன்று பரந்தும் விரிந்தும் உள்ளது.

ஆசிரியர இன்னும் பல நூல்கள் எழுதி தமிழுக்கும் அவர் எழுத்துக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று தேவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

சிறப்பு :



அகர முதல என்று குறளினை தொடங்கி, மொத்தமாக 1330குறள்களை தந்து, அதன் மூலம் மக்களுக்கு வாழ்க்கை நெறிகளை குறிப்புணர்த்தியவர்தான் திருவள்ளுவர். "உலக பொதுமறை" என்று அனைத்து மக்களாலும் ஏற்று கொள்ளப்பட்ட 133 அதிகாரரங்கள் மூலம் தெளிவாக பல நூறு வருடங்களுக்கு முன்னரே இந்த உலகிற்கு தெரிவித்து சென்றவர் என்ற பெருமை திருவள்ளுவருக்கு உண்டு.

பிறப்பு:

வாழ்ந்த காலம்:கி .பி. 2 முதல் 8 நூற்றாண்டு வரையிலான இடைப்பட்ட காலம் (சரியான ஆதாரம் இல்லை)
பிறந்த இடம் - மயிலாப்பூர் (சரியான ஆதாரம் இல்லை)
மனைவியின் பெயர் - வாசுகி
வசித்த இடம் - மயிலாப்பூர்

திருக்குறள் எனும் அற்புத படைப்பு:

"வள்ளுவன் தன்னை உலகிற்கு தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதியும், வள்ளுவனைப் "பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே! - பாரதிதாசன்" என்று பாரதிதாசனும், அனைவராலும் போற்றப்படும் அளவிற்கு தமிழுக்கு புகழை சேர்த்த இவரது மிகச்சிறந்த படைப்பு இந்த திருக்குறள் எனும் நூல். திருக்குறளை படிக்காத தமிழன் இல்லை என்று கூட கூறலாம். அந்த அளவிற்கு தமிழ் நன்னெறி நூலாக உள்ளது . திருக்குறளின் உன்னதத்தினை உணர்ந்த இதனை "ஜி.யு. போப்" மற்றும் பலம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

**திருக்குறள் எனும் அற்புத படைப்பு:**

ஈரடிகளில் உலகின் தத்துவத்தினை தெள்ளத்தெளிவாக கூறி அனைவரும் எளிமையாக புரிந்து கொள்ளும் அளவிற்கு தன் கருத்துகளை அதில் முத்து முத்தாக பொறித்துள்ளார். மொத்தம் 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்ட இந்த நூல் முறையே "அறத்துப்பால்", "பொருட்பால்" மற்றும் "காமத்துப்பால்" என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அறத்துப்பால் — 38 அத்தியாயங்கள்
பொருட்பால் — 70 அத்தியாயங்கள்
காமத்துப்பால் — 25 அத்தியாயங்கள்

**அறத்துப்பால் :** முதல் பிரிவான அறத்துப்பாலில் 38 அதிகாரங்கள் தொகுக்கப்பட்டுள்ளது. அதில் அறம் சார்ந்த வாழ்வியல் கருத்துக்கள் முதல் இல்லறம் போன்ற பல கருத்துக்களை கூறி அறத்தின்படி எவ்வாறு வாழ்க்கையினை முறைப்படுத்தி கொண்டு செல்லவேண்டும் என்று கருத்துகளை விவரித்து உள்ளார்.

**பொருட்பால்:** இரண்டாவது பாலான பொருட்பாலில் 70 அதிகாரங்கள் இடம்பெற்றுள்ளன. உட்பிரிவுகள் மூலம் அரசியல், ஊழியல் மற்றும் துறவறிவியல் போன்ற கருத்துக்களை இடம்பெறவைத்துள்ளார்.

**காமத்துப்பால் :** மூன்றாம் பாலான காமத்துபாலில் களவியல் மற்றும் கற்பியல் என்ற உட்பிரிவுகள் மூலம் காதல், இன்பம் மற்றும் இல்லறம் குறித்த கருத்துக்களை அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று வகைப்பாட்டின் மூலம் வாழ்வியல் கருத்துக்களை கூறி வாழ்வின் உன்னதத்தை கூறி மக்களை நெறிப்படுத்திய புலவர் திருவள்ளுவர் உலகத்திற்கு அழியா பொக்கிஷமான திருக்குறளை தந்து சென்றார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

## திருக்குறளின் சிறப்பு பெயர்கள் :

- உலக பொதுமறை
- உத்திரவேதம்
- பொய்யாமொழி
- முப்பால்
- தெய்வநூல்
- வாயுறை வாழ்த்து
- ஈரடி நூல்
- தமிழ் மறை

## திருவள்ளுவரின் வேறு நூல்கள்:

திருக்குறளைத் தவிர, திருவள்ளுவர் மருத்துவம் பற்றிய இரு நூல்களான 'ஞான வெட்டியான்' மற்றும் 'பஞ்ச ரத்னம்' ஆகிய நூல்களை இயற்றியுள்ளதாகப் பலரும் தெரிவிக்கின்றனர்.

## திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள்

- பொய்யில்புலவர்
- செந்நாப்போதானார்
- பெருநாவலர்
- தெய்வபுதல்வர்
- தேவர்
- தெய்வப்புலவர்
- முதற்பாவலர்
- நாயனார்
- மாதானுபங்கி

## திருவள்ளுவர் இறப்பு

தமிழ் புலவரான திருவள்ளுவர் இறப்பு குறித்து இன்றுவரை அதிகாரபூர்வமான குறிப்புக்கள் இல்லை. ஆனால், மயிலாப்பூரில் பிறந்து வளர்ந்த இவர் ஒளவையர் உதவியுடன் மதுரையில் உள்ள தமிழ்ச்சங்கத்தில் திருக்குறளினை அரங்கேற்றினார் என்றும் நம்பப்படுகிறது.



**திரு அ. வில்சன், இதழாசிரியர்**

## திருவள்ளுவரின் நினைவுச்சின்னங்கள் மற்றும் சிலை :

வள்ளுவர் கோட்டம் - இன்றைய சென்னையில் உள்ள ஒரு முக்கிய பகுதி இந்த "வள்ளுவர் கோட்டம்". இந்த வள்ளுவர் கோட்டத்தில் திருவள்ளுவருக்காக ஒரு மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த குறள் மண்டபத்தில் திருக்குறளின் அனைத்து குறள்களும் பதிக்கப்பட்டுள்ளன . இன்றுவரை தமிழக அரசு அதனை சிறப்பாக பேணிக்காத்து வருகிறது.



வள்ளுவரின் சிலை - தமிழக மற்றும் இந்திய தேசத்தின் கடைக்கோடியான கன்னியாகுமரியில் முக்கடல் சங்கமிக்கும் இடத்தில் இவரது திருஉருவ சிலை நிருவப்பட்டுள்ளது. அவரது 133 அதிகாரிங்களின் நினைவாக அந்த சிலையானது 133 அடிகள் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த சிலையினை செய்த சிற்பியின் பெயர் கணபதி ஸ்தபதி.

வள்ளுவரின் கோயில் - திருவள்ளுவருக்காக அவரது பிறப்பிடமாக கருதப்படும் மயிலாப்பூரில் ஒரு கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இன்றுகூட அதனை நீங்கள் காண முடியும். அந்த கோவிலானது மயிலாப்பூர் முண்டக கன்னியம்மன் கோயில் அருகில் உள்ளது.

வள்ளுவரின் மண்டபம் - வள்ளுவர் கோட்டம்

வள்ளுவரின் சிலை - கன்னியாகுமரி [ சிற்பி - கணபதி ஸ்தபதி ]

வள்ளுவரின் கோயில் - மயிலாப்பூர்

மேலும் பல நாடுகளின் வள்ளுவரின் புகழினை உணர்ந்து பல சிலைகள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

# நாளை நமதே

நம்மால்

முடிந்த வரை செய்வதல்ல முயற்சி

நினைத்ததை முடிக்கும் வரை செய்வதே

உண்மையான முயற்சி.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு   அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு   சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :
9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com